# இளநிலை பொறியாளர் 2ம் நிலையிலிருந்து,

# இளநிலை பொறியாளர் முதல் நிலையாக

# தேர்வு செய்யப்பட்ட 205 நபர்களுக்கு பணியிட உத்திரவு வழங்க கோரி வாரியத் தலைவருக்கும்

# தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அவர்களுக்கும் அளிக்க வேண்டிய கடிதம்

அனுப்புனர்

பெறுநர்

1) **தலைவர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணா சாலை,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
சென்னை – 600 002.

2) **தலைமைப் பொறியாளர் / பணியப்பு** அவர்கள்**,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணா சாலை,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரியம் **–** இளநிலைப் பொறியாளர் 2ம் நிலையில் இருந்து இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை (மின்னியல்) பதவி உயர்வு – **11.11.2015** ல் வெளியிடப்பட்டுள்ள 205 பொறியாளர்களின் பேனல் – மதுரை உயர் நீதிமன்ற தடை அகற்றப்பட்டுள்ள நிலையில் – விரைந்து பதவி உயர்வு மற்றும் வட்ட ஒதுக்கீடு உத்திரவு வழங்கிட கோருதல் தொடர்பாக**.**

பார்வை: Memo No.60296/280/G1/G12/2013-60, DT.11.11.2015.

••••••

நான் தமிழ்நாடு மின்சார வாரியம் -------------------- மின் பகிர்மான வட்டத்தில் இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை (மின்னியல்) பதவியில் பணிபுரிந்து வருகிறேன். நான் ------------ தேதியில் இளநிலைப பொறியாளர் 2ம் நிலையாக பணியில் சேர்ந்தேன். எனக்கு உள்ளிட்டு 3.06.2008 முதல் 1.06.2009 வரை இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியில் சேர்ந்த 627 இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பொறியாளரிகளின் முதன்மைப்பட்டியல் 13.12.2011 தேதியில் வாரியம் வெளியிட்டது. மேலும் 2.09.2009 முதல் 27.11.2012 வரை இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியில் சேர்ந்த 393 இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பொறியாளர்களின் முதன்மைப் பட்டியலை மின் வாரியம் 16.04.2014—ல் வெளியிட்டது.

வாரியம் 3.12.2013ல் 253 பொறியாளர்களும், 29.1.2014ல் 134 பொறியாளர்களும் என்னை உள்ளிட்டு, 13.12.2011 தேதியில் வாரியம் வெளியிட்டுள்ள 627 இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பொறியாளர்களின் முதமைப்பட்டியலில் எஞ்சியிருந்த அனைவருக்கும் இளநிலைப் பொறியாளர் 1 ம் நிலை பதவி உயர்வு வழங்கிட தகுதிகாண் அறிக்கையை கேட்டது. மேற்கண்ட இளநிலை பொறியாளர் 2ம் நிலை முதன்மை பட்டியலுக்கோ, அல்லது பதவி உயர்வு அளிப்பதற்கு கேட்கப்பட்ட தகுதிகாண் அறிக்கைக்கோ எவ்வித நீதிமன்ற தடையும் இல்லாத நிலையில், கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக தகுதியான எங்களுக்கு இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை பதவி உயர்வு எவ்வித காரணமும் இன்றி வழங்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், இரண்டு ஆண்டுகள் பாதிப்புக்கு பிறகு, பார்வையில் கண்ட உத்திரவு வாயிலாக கடந்த 11.11.2015—ல் எனக்கு உள்ளிட்டு 205 பொறியாளர்களுக்கு, இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை பதவி உயர்வு வழங்கிட வாரியம் பேனல் வெளியி ட்டது.

நாங்கள் 2013 முதல் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு பெறுவதற்கு இடையூராக, களப்பிரிவில் உள்ள பகுதி நேர பட்டயம் முடித்தவர்களில் சிலர் வாரிய விதிமுறைபடி தொழில்நுட்ப உதவியாளராக வராமல், நீதிமன்றத்துக்கு சென்று நேரடியாக இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவி உயர்வு அளக்க வேண்டும் என முறையீடு செய்ததை, வாரியம் எங்களுக்கு முறையாக வழங்க வேண்டிய இளநிலைப் பொறியாளர் 2ம் நிலையிலிருந்து இளநிலைப் பொறியாளர் 1ம் நிலைக்கு பதவி உயர்வை வழங்காமல் அவர்களுக்கு சாதகமாகவே நடந்து வந்தது. இந்நிலையில் தனி நீதியரசர் அவர்களின் தீர்ப்புபடி இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியை முன்தேதியிட்டு அவர்கள் பெற்றனர்.

இந்த தனிநீதியரசர் அவர்களின் தீர்ப்பு, 10.07.2015 ல் டிவிஷன் பெஞ் மூலம் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த 30 நபர்களும் தனி நீதியரசர் அவர்கள் முன்தேதியிட்டு சீனியாரட்டி அளித்ததை அடிப்படையாக கொண்டு இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை ஆன 6 மாதத்துற்குள், இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை பதவி உயர்வு பேனலை, 11.11.2015—ல் மின்வாரியம் தவறாக வெளியிட்டது.

இந்த சூழலில், பட்டயம் படிக்காத இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியில் பணிபுரியும் சிலர், மின்வாரிய விதிமுறைகளுக்கு மாறாக, இளநிலைப் பொறியாளர் 2ம் நிலையில் இருந்து இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை பதவி உயர்விற்கு 3:1 விகிதாசாரம் வழங்கிட வேண்டும் என கேட்டு மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த பட்டயம் படிக்காதவர்களின் வழக்கில், மேற்கண்ட 205 மற்றும் 30 பட்டய பொறியாளர்களுக்கு தனித்தனியாக வாரியம் வெளியிட்ட இரு பேனலுக்கும் 20.11.2015ல் இடைக் கால தடை விதித்தது.

மேலும் 2013—ல் இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியில் சேர்ந்த மேற்கண்ட 30 பட்டய பொறியாளர்களுக்கு வாரியம் தவறாக இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை பேனல் வெளியிட்டதை எதிர்த்து, 2013 க்கு முன்பு இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியில் சேர்ந்த பட்டய பொறியாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் 30 பேர் பேனலுக்கு மட்டும் 18.11.2015 ல் இடைக் கால தடை விதித்துள்ளது.

இதை தொடர்ந்து மதுரை உயர்நீதிமன்றத்தில் பட்டயம் படிக்காதவரின் 205 மற்றும் 30 பொறியாளர்களுக்கான இரு தனித்தனி பேனலுக்கும் பெற்று இருந்த இடைக் கால தடையானது

27.04.2016–ல் நீக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் பட்டயம் படித்து சீனியராக இளநிலைப் பொறியாளர் 2ம் நிலை பதவியில் சேர்ந்தவர்கள், **30 பேர் பேனலுக்கு மட்டும், 18.11.2015 ல் பெற்ற இடைக் கால தடை உத்திரவு இது நாள் வரை அகற்றப்படாமல் நிலுவையில் உள்ளது.**

மேற்கண்ட 205 மற்றும் 30 பொறியாளர்களின் இளநிலைப் பொறியாளர் 1ம் நிலை பதவி உயர்வு பேனல் **இரண்டும் தனித்தனியான பேனல்கள் ஆகும்.** எனவே **30 பொறியாளர்களின் நீதிமன்ற இடைக் கால தடை அகற்றப்படும் வரை காத்திருக்காமல்,** 2013 முதல் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித காரணமும் இன்றி பதவி உயர்வு பெற எல்லா தகுதிகளும் இருந்தும் பாதிப்பு அடைந்துள்ள, நான் உள்ளிட்டு இருக்கும் 11.11.2015ல் வெளியிடப்பட்டுள்ள **205 பொறியார்களின் பேனலுக்கு உடனடியாகக் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு வழங்கி, வட்ட ஒதுக்கீடு வழங்கிட** மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

இடம்:

நாள்: